திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம் .
வாரம் ஒரு நீதிக்கதை - 25.01.2026

# கோபுர தரிசனம்.. கோடி புண்ணியம்..!

ஒரு மன்னர் தன் பிறந்த நாளை முன்னிட்டு கோயிலில் அன்னதானம் செய்துகொண்டிருந்தார். அப்போது சற்றே கிழிந்த ஆடையுடன் ஒரு பரம ஏழை வந்து வரிசையில் நின்றான். அவனைப் பார்த்த மற்றவர்கள் ஒதுங்கி நின்றனர். இதை உணர்ந்த அந்த ஏழை, வரிசையில் நிற்காமல் சற்று தள்ளியே நின்றான். நேரம் போய்க்கொண்டே இருந்தது. இவன் தள்ளி நின்றதால் இவனுக்குப் பின்னால் வந்தவர்கள் எல்லோரும் அன்னதானம் பெற்றார்கள்.

இவன் மனதிற்குள் ஒரு சோகம். எல்லோருக்கும் தரப்படும் அன்னதானம்கூட நமக்குக் கிடைக்க எவ்வளவு காத்திருப்பு? எவ்வளவு போராட்டம்? என்று தன் விதியை நொந்து கொண்டான்.

வெகு நேரம் காத்திருந்து காத்திருந்து, சரி நமக்கு இன்று பட்டினி என்று எழுதியுள்ளது போல என்று நினைத்து, “அப்பனே.. ஆண்டவா... என்னை ஏன் இப்படிப் பிறக்கச் செய்தாய்?” என்று கோயில் கோபுரத்தைப் பார்த்து மனதில் உள்ள தன் மனக்குமுறலைச் சொல்லிவிட்டு, கோவில் அருகே உள்ள குளத்தங்கரையில் அமர்ந்தான். குளத்து நீரைக் கையில் எடுத்து முகத்தைக் கழுவி, அங்கேயே சோர்வாக அமர்ந்தான்.

மன்னர் அன்னதானம் கொடுத்து முடித்து, அந்தக் கோயில் குளத்தங்கரையில் காலாற நடந்து வந்தார். படியில் அமர்ந்திருந்த அந்த ஏழையைப் பார்த்து "என்னப்பா... சாப்பிட்டாயா?" என்று சற்று தொலைவில் இருந்தே கேட்டார். கேட்பது மன்னர் என்று தெரியாமல் " ஊரே சாப்பிட்டது.. என் தலையில் இன்று பட்டினி என்று எழுதியுள்ளது போல ஐயா " என்று விரக்தியாக, முகத்தை திருப்பாமல் குளத்துநீரைப் பார்த்தபடியே பதில் சொன்னான் அந்த ஏழை.

அவன் சொன்ன பதில் மன்னரின் மனதை வருத்தியது. தான் வழங்கிய அன்னதானத்தில் ஒரு அப்பாவி ஏழை இப்படி விடுபட்டுள்ளானே என்று அருகில் சென்று அவன் தோளில் கை வைத்து “மன்னித்துவிடப்பா...ரொம்ப பசிக்கிறதா உனக்கு?" என்று கேட்க, திரும்பிப் பார்த்தவன் திகைத்து எழுந்து, “ மன்னா... நீங்கள் என்று தெரியாமல் அமர்ந்து கொண்டே பதில் சொல்லிவிட்டேன்...மன்னிக்க வேண்டுகிறேன்' என்று பதறினான்.

மன்னர் சிரித்துக்கொண்டே “என்னுடன் வா..”என்று அவனைத் தேரில் ஏற்றிக்கொண்டு அரண்மனைக்கு விரைந்தார்.

“போய் குளித்துவிட்டு வா” என்று தனக்கென்று வாங்கி வைத்திருந்த புதிய ஆடைகளில் ஒன்றை அவனுக்குக் கொடுத்தார். குளித்து, புத்தாடை அணிந்து வந்தவனுக்கு அறுசுவை விருந்து கொடுத்தார் மன்னர்.

பிறகு அவன் கையில் ஒரு குடம் நிறைய பொற்காசுகளைக் கொடுத்தார். 'இன்றிலிருந்து நீ ஏழை இல்லை...இந்தப் பணத்தை வைத்து நீ விரும்பும் தொழிலை நேர்மையாக செய்து கௌரவமாக வாழ்" என்று வாழ்த்தினார்.

அதுவரை அமைதியாக இருந்த ஏழையின் கண்களில் தாரை தாரையாக கண்ணீர் கொட்டியது. “ஏனப்பா அழுகிறாய்?” என்று மன்னர் கேட்க,

*"நான் இதுநாள் வரை பிறவி ஏழை என்று மட்டும்தான் நினைத்திருந்தேன் மன்னா... இந்தத் தருணம்தான் நான் ஒரு பிறவி முட்டாள் என்று புரிந்துகொண்டேன் " என்று சொன்னான்.*

*மன்னர், "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்க*

*"வாழ்க்கையில் இன்றுதான் முதல் முறையாக கோயில் கோபுரத்தைப் பார்த்து, என்னை ஏன் இப்படி வைத்திருக்கிறாய்?" என்று ஆண்டவனிடம் முறையிட்டேன். கேட்ட சில நிமிடங்களில் உங்களை அனுப்பி என் தலையெழுத்தையே மாற்றிவிட்டான்.*
*கடவுளிடம் கேட்டால் நாம் கேட்டதை விட இன்னும் பல மடங்கு தருவான் என்பதை உணராமலேயே, இன்றுவரை ஒரு முட்டாளாகத்தானே இருந்துள்ளேன் " என்று சொல்லி அழுதான்.*

*நமக்கு ஒன்று கிடைக்கவில்லை என்றால், சராசரியைவிட மிகச் சிறந்த ஒன்றை நமக்காக கடவுள் தரப்போகிறார் என்று நம்புவோம்.*
*நல்லதே நடக்கும்.*

* * *